உறுப்பினர்களின் பார்வைக்காக, சட்டமன்றப் பேரவை நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளதென்பதையும், இவ்வறிக்கைகள் பேரவைக்கு அளிக்கப்பட்டவுடன், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்படும் என்பதனையும், இதன் அச்சிட்ட பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெறாது என்பதனையும், மேல் நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட துறைகளுக்கு மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்படும் என்பதனையும், பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

6. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், பொதுக் கணக்குக் குழுவினுடைய தலைவர் அவர்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018-2019 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து மூன்று முதல் அறுபத்து ஆறு வரையிலான 4 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை, பொது நிறுவனங்கள் குழுவினுடைய தலைவர் அவர்கள்.

திரு. S. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018-2019 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவினுடைய எழுபத்து மூன்று மற்றும் எழுபத்து நான்கு ஆகிய இரண்டு அறிக்கைகளை பொது நிறுவனங்கள் குழுவின் சார்பில் தங்கள் அனுமதியோடு பேரவைக்கு அளிக்கின்றேன்.

(இ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, அரசு உறுதிமொழிக் குழுவினுடைய தலைவர் அவர்கள்.